T. C - 019

001/DD/22

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

குறிப்பு :

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

2. வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

3. கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

### பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. (1 × 10 = 10)

The Television is one of the wonders of modern India. Many useful programs on education, health, agriculture and family planning are specially prepared for rural viewers. Interesting dramas and films are shown at regular intervals the television is also used for commercial advertisements.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. மாணவரும் சமுதாயத் தொண்டும்.

3. பெண் கல்வி.

4. பணியாளர் விடுப்பு விண்ணப்பம் - மருத்துவ சான்றின் பேரில் விடுப்பு. (1 × 10 = 10)

[Turn over

## பகுதி — II

5. உரைநடையை படித்து விடையளிக்க. (5 × 1 = 5)

தமிழ்ச் சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் எனப் பிரித்து வளமடையச் செய்தனர் மேலும், எளிய குடிமகனையும், குடிமக்களையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர். குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரம் "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்னும் அறநெறியை உலகாள்வோர்க்கு உணர்த்துகிறது. இந்நூல் கூறும் கலை நுட்பச் செய்திகள், சங்ககாலத் தமிழர்களின் கலை, இலக்கியத் தனித் தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

வினாக்கள் :

(அ) தமிழ்ச் சான்றோர் மொழியை எவ்வாறு பிரித்தனர்?

(ஆ) குடிமக்கள் காப்பியம் எது?

(இ) தமிழ்ச் சான்றோர் யாரைக் காப்பியத் தலைவர்களாக்கினார்?

(ஈ) சிலப்பதிகாரம் உலகாள்வோர்க்கு உணர்த்தும் அறிநெறி யாது?

(உ) சங்க காலத் தமிழர்களின் கலை இலக்கியத் தனித் தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்பவை எவை?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப உரையாடலை நிறைவு செய்க. (5 × 1 = 5)

முருகன் : ____________

இரவி : அம்பேத்கர் இயற்பெயர் பீமா ராவ் ராம்ஜி

முருகன் : பெற்றோர் பெயர் என்ன ?

இரவி : ____________ , ____________

முருகன் : பீமா ராவ் ராம்ஜியின் ஆசிரியர் பெயர் என்ன ?

இரவி : ____________

முருகன் : தம் பெயரை ஏன் அம்பேத்கர் என மாற்றிக் கொண்டார் ?

இரவி : ____________ ____________

முருகன் : ____________ ____________

இரவி : அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

## பகுதி — III

### மொழிப் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : (40 × 1 = 40)

7. தமிழ் மொத்த எழுத்துகள் எத்தனை?

8. 97 என்ற எண்ணை தமிழ் எண்ணுருக்களால் எழுதுக.

9. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

"அடியற்ற மரம் போல"

10. ஆனி மாதத்திற்கு பின்வரும் மாதம் எது?

11. வாரத்தின் முதல் நாள் எது?

12. விடுபட்ட எழுத்தை எழுதுக.

க, ச, ______, த, ப, ______ , ல

13. அகர வரிசைப்படுத்தி எழுதுக.

கேள்வி, கொக்கு, கல்வி, கிளி

14. B.Lit. பட்டப் படிப்பைத் தமிழில் விரித்து எழுதுக.

15. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

ஒளி, ஒலிப்படக் கருவி, திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகின்றன.

16. எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.

எ.கா: யானை பிளிறியது. சரியா? தவறா?

17. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

18. விரித்து எழுதுக. "ஐவகை நிலம்"

19. விடைக்கேற்ற வினா அமைக்க.

பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவம் ஆகும்.

20. சந்திப்பிழை நீக்குக.

திரைபடம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டிபோட வல்லது.

21. இரு பொருள் தருக.

மெய் –

22. பிற மொழிச் சொல்லுக்கு தமிழ் சொல் எழுதுக.

மம்மி, நான் பேங்கிற்குப் போய் வருகிறேன்

23. பிழையை திருத்தி எழுதுக.

அந்தச் சிற்பம் ஒரே கல்லால் ——————

[வடிக்கப்பட்டது, செதுக்கப்பட்டது]

24. அன்னம் போல நடந்தாள் – இதில் உவம உருபு எது?

25. முதல் எழுத்தை மாற்றி வருவது "மஞ்சு – மைஞ்சு" இது என்ன போலி?

26. இந்தியாவின் தேசிய மரம் எது?

27. இளமைப் பெயர்களை எழுதுக.

சிங்கம் ——————, மான் ——————

28. பேச்சு வழக்கு சொல்லை மாற்றுக.

நாய் <u>கத்தியது</u>.

29. பிறமொழிச் சொல்லுக்கு தமிழ் சொல் எழுதுக.

வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்.

30. உரிய நிறுத்தற் குறியிடுக.

ஆம் போக வேண்டும் என்றார்.

தமிழ் எண்ணுரு பொருத்துக.

31. 58 – கூ೦

32. 36 – எ௫

33. 75 – ௫அ

34. 90 – ௬௯ா

35. எதிர்காலச் சொல் எழுதுக.

ஓடுகிறேன்.

36. பால் வகை அறிந்து எடுத்து எழுதுக.

ஐவர் கோலம் போட்டனர்

37. இரட்டைக் கிளவிக்கு எ.கா. தருக.

38. தமிழாக்கம் செய்க.

Information

சரியான சொல்லை தேர்வு செய்க.

39. ____________ பறவைகள் வாழிடம் (மறம், மரம்)

40. ____________ எழுந்தவுடன் படிப்பு (காளை, காலை)

41. இடை எழுத்தை மாற்றி எழுதுக.

பதம்

42. I.P.S. (இ.கா.ப.) விரிவாக்கம் தருக.

43. பொருந்தாத சொல்லை எழுதுக.

பசுமை, மஞ்சள், கருமை, செம்மை.

44. வினைச் சொல் எது?

முருகன் மரத்தை வெட்டினான்.

45. பொருத்தமான சொல்லைத் தேர்வு செய்.

அவர்கள் படம் ____________ (வரைந்தாள், வரைந்தார்கள்)

46. விடைக்கேற்ற வினா அமைக்க.

திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.